Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®




ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 208 | உள்ளூர் - 27.07.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 208 | வெளியூர் - 28.07.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

இந்த தேதிகளில் பிறந்தவர்களுக்கு அதிர்ஷ்டம்?

AIIMS NORCET-11: 2,218 நர்சிங் ஆபிசர் பணியிடங்கள்!

வேளாண் பட்ஜெட்: கருத்துகேட்பு!

அதிமுக செயற்குழு கூட்டம்: ஆகஸ்டில்!

## இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரெயில் அசத்தல்!




புதுடெல்லி, ஜூலை. 27–
இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் ரெயில், அறிமுகமானதிலிருந்து 1,200 கி.மீ.க்கும் மேல் வெற்றிகரமாக சோதனைப் பயணம் மேற்கொண்டு புதிய சாதனை படைத்துள்ளது. இந்தப் பயணத்தின் மூலம் 3,200 லிட்டர் டீசல்மிச்சப்படுத்தப்பட்டு ள்ளது. ஹரியானாவின் ஜிந்த்சோனிபத் வழித்தடத்தில் இயக்க ப்படும் இந்த ரெயில், ஹைட்ரஜன் எரிபொருள் செல்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து நீரா வியை மட்டுமே வெளியிடுவதால் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகும். அடுத்த கட்டமாக டெல்லி வழித்தடத்திலும் சோதனை இயக்கம் நடைபெற உள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த் சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம் பாடிகுப்பம் அருகில் கூவம் ஆற்றுப் பகுதியை தூர்வாரி சீரமைக்கும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்து கள ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு கொறடா / விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.சபரிநாதன், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப. ரேவந்த் சரண், அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.பாலமுருகன், சைதாப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம். அருள் பிரகாசம், நீர் வளத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, பெரு நகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் மரு. சமீரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், சென்னை மாவட்ட ஆட்சியர் எஸ். மாலதி ஹெலன், தலைமைப் பொறியாளர் ஜானகி, நீர்வளத் துறை பொறியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் கலந்துகொண்டனர்.

## அமெரிக்காவில் உணவுத் திருவிழாவில் துப்பாக்கிச்சூடு - 2 பேர் பலி - ஐவர் காயம்!

அமெரிக்கா, ஜூலை. 27–
அமெரிக்காவின் சியாட்டல் நகரில் நடந்த உணவுத் திருவிழாவில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டனர். ஐவர் படுகாயமடைந்தனர்.

சியாட்டல் சென்டரில் ஸ்பேஸ் நீடில் பகுதியில் நடந்த வருடாந்திர உணவுத்திருவிழாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூட்டுயிருந்தனர். மாலை 6 மணியளவில் மர்ம நபர்கள் அங்கு புகுந்து கூட்டத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.




இதில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் ஐவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு ஹார்பர்வியூ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சியாட்டில் தீயணைப்புத்துறை செய்தித்தொடர்பாளர் கிரேஸ் நுனெஸ் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சியாட்டில் நகர மேயர் கேட்டி வில்சன் தெரிவித்துள்ளார். சம்பவம் நடந்த இடத்தை சுற்றிவளைத்து போலீசார் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

சியாட்டில் நகர் போலீஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், துப்பாக்கிச்சூடு குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும், விரைவில் மேலதிக தகவல்கள் தெரிவிக்கப்படும்'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காமன்வெல்த் போட்டி: இந்தியாவிற்கு தங்கம், வெள்ளி!

சென்னை, ஜூலை. 27–
ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் 2026 காமன்வெல்த் போட்டியில், பெண்களுக்கான பளுதூக்கும் 48 கிலோ பிரிவில், மொத்தம் 190 கிலோ எடையைத் தூக்கி, இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்கோம் மீராபாய் சானு தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.





ஸ்னாட்ச் பிரிவில் 85 கிலோ மற்றும் கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவுகளில் 105 கிலோ என 190 கிலோ தூக்கி சாதனைப் படைத்தார். இது தொடரில் இந்தியா வெல்லும் முதல் தங்கப்பதக்கமாகும். காமன்வெல்த் போட்டிகளில் இது அவருக்குக் கிடைத்த மூன்றாவது தொடர்ச்சியான தங்கப் பதக்கமாகும். 2018 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

டோக்கியோ ஒலிம் பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற இவர். 2014–ல் கிளாஸ்கோவில் நடைபெற்ற போட்டிகளிலும் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். ஏற்கனவே இந்தியா ஒரு வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்களை இந்தாண்டு தொடரில் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதே போல் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட சங்கரலிங்க புரத்தை சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி என்ற பளுதூக்கும் வீரர் காமன்வெல்த் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரது பெற்றோர் முத்துப்பாண்டி– பேச்சியம்மாள். இந்த தம்பதியின் இளைய மகனான ராஜா முத்துப்பாண்டி ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்று வரும் காமன்வெல்த் போட்டியில் 65 கிலோ எடை பிரிவு பளுதூக்கும் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

## விண்வெளியில் இந்தியாவின் புதிய மைல்கல்!




புதுடெல்லி, ஜூலை. 27–
இந்தியாவின் விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு வேகமாக வளர்ந்து வருகிறது. ஐதராபாத்தின் 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' நிறுவனம், 2022–ல் 'விக்ரம்–எஸ்' என்ற ராக்கெட்டை கூட்டுச்சோதனை முறையில் வெற்றிகரமாக விண்வெ ளியை எட்டியது, இது நாட்டின் விண்வெளி வரலாற்றில் முக்கிய மைல்க ல்லாக அமைந்துள்ளது.


இந்த சாதனை, ISRO–வின் வழிகாட்டுதலுடன் செயல்படும் இந்திய தனியார் விண்வெளி நிறுவனங்களின் திறனை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது. மேலும், 2020–ல் விண்வெளித் துறையை தனியாருக்கு திறந்த மத்திய அரசின் கொள்கையின் பலனாக இந்த முன்னேற்றம் கிடைத்துள்ளது. உலக விண்வெளி ஏவுதல் சந்தையில் இந்தியாவின் பங்கு அதிகரித்து, குறைந்த செலவில் நம்பகமான ஏவுதல் சேவைகளை வழங்கும் நாடாக இந்தியா மேலும் வலுப்பெறும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

## தேர்வு முறைகேட்டுக்கு

# மத்திய அரசு கடும் அடி!

# 10 ஆண்டு சிறை, ரூ.10 கோடி அபராதம்!!

## பொதுத்தேர்வு சட்டத் திருத்த மசோதா அறிமுகம்



புதுடெல்லி, ஜூலை. 27–
நீட் உள்ளிட்ட தேர்வுகளில் முறைகேடுகளை தடுப்பதற்காக மக்களவையில் பொதுத்தேர்வுகள் சட்ட திருத்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே மசோதாவை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகம் செய்தார். வினாத்தாள் கசிவு, தேர்வு தொடர்பான மோசடிக்ளில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க சட்டத்தில் திருத்தம் செய்யப்பட உள்ளது. முறைகேட்டின் தீவிரத்தை பொறுத்து 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கும் வகையில் திருத்தம் செய்யப்படும். திட்டமிட்டு குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டு சிறை; ரூ.10 கோடி வரை அபராதம் விதிக்கப்படும்.

மேல் முறையீடு வழக்குகள் மூன்று மாதத்திற்குள் முடிக்க வேண்டும்; தவறு செய்யும் நிறுவனங்கள் பொதுத்தேர்வுகளை நடத்த விதிக்கப்படும் தடை காலம் 8 ஆண்டுகளாக உயர்த்தப்படும் உள்ளிட்ட சரத்துகள் மசோதாவில் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் மீதான தாக்குதலை கண்டித்தும், மத்திய அரசு பதிலளிக்க வலியுறுத்தியும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஈடுபட்டன. அமளிக்கு இடையே இந்த மசோத தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக நாடாளுமன்ற விவகாரத்துறை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுகையில், பொதுத் தேர்வுகள் (முறைகேடுகளைத் தடுக்கும்) திருத்த மசோதா, 2026–க்கு அனைத்து அரசியல் கட்சிகளும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். வினாத்தாள் கசிவு சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனையை உறுதி செய்வதற்கும், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் இந்த மசோதா மிகவும் முக்கியமானது.

இப்போதைய சூழலில் இதுவே நாடாளுமன்றத்தின் முதன்மை விவாதப் பொருளாக இருக்க வேண்டும். வேறு எந்த விவகாரத்தையும் கொண்டு வந்து கவனத்தை திசைதிருப்பக் கூடாது. எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் முற்றிலும் தவறானவை. இந்த மசோதாவை எந்த நிலையிலும் நிறைவேற்றுவதே அரசின் நோக்கம். இந்த சட்டம் அமலுக்கு வந்தால் வினாத்தாள் கசிவில் ஈடுபடுவோருக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும். பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ள தேர்வு சீர்திருத்த நடவடிக்கைகளின் முக்கிய அங்கமாக இந்த மசோதா இருக்கிறது'' என்றார்.

## E20 எத்தனால் விவகாரம்: பொய் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக மும்பை உயர் நீதிமன்றத்தில் நிதின் கட்கரி வழக்கு!



புதுடெல்லி, ஜூலை. 27–
மத்திய அரசின் E20 எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தின் மூலம் தானும் தனது குடும்பத்தினரும் பெருமளவில் லாபம் அடைவதாக சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டு வரும் அவதூறு வீடியோக்கள் மற்றும் 'டீப்ஃபேக்' (Deepfake) உள்ளடக்கங்களுக்கு எதிராக மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி மும்பை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

**நீதிமன்ற அனுமதி:**

இந்த அவதூறு உள்ளடக்கங்களை வெளியிட்ட நபர்கள் மற்றும் தளங்கள் நீதிமன்ற எல்லைக்கு வெளியே இருப்பதால், அவர்கள் மீது வழக்குத் தொடுக்க அனுமதி கோரி நிதின் கட்கரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி அபய் அஹுஜா, மெட்டா, கூகுள் போன்ற சமூக வலைதள நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது வழக்கு தொடர கட்கரிக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார்.

**அவதூறு குற்றச்சாட்டுகள்:**

சமீபகாலமாக யூடியூப், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் E20 பெட்ரோல் பயன்பாட்டினால் வாகனங்களின் என்ஜின் பழுதடைவதாகவும், மைலேஜ் குறைவதாகவும் வீடியோக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

அதோடு, இந்த எத்தனால் கொள்கையின் மூலம் அமைச்சர் நிதின் கட்கரியும் அவரது குடும்பத்தினரும் நிதி ரீதியாகப் பயனடைகிறார்கள் என்ற தவறான செய்திகளும், ஏஐ மூலம் உருவாக்கப்பட்ட போலியான 'டீப்ஃபேக்' வீடியோக்களும் பரப்பப்பட்டு வருகின்றன.

**நிதின் கட்கரி தரப்பு விளக்கம்:**

எத்தனால் கலப்பு தொடர்பான E20 கொள்கை மற்றும் அதன் நிர்வாகம் முழுமையாக 'மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின்' கட்டுப்பாட்டில்தான் வருகிறது. சாலை போக்குவரத்து அமைச்சகத்திற்கும் இதற்கும் நேரடியாகத் தொடர்பு இல்லை.

தனது குடும்பத்தினரின் வணிக வருவாயில் எத்தனால் உற்பத்தி மூலம் கிடைக்கும் பங்கு 10 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது என்றும், இதன் மூலம் தனிப்பட்ட முறையிலோ அல்லது குடும்பத்தின் மூலமாகவோ பெருமளவு லாபம் அடைவதாகக் கூறுவது முற்றிலும் ஆதாரமற்ற பொய் என்றும் கட்கரி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

முன்னதாக, தவறான தகவல்களைப் பரப்பியதாக யூடியூபர் மணீஷ் காஷ்யப் உட்பட சில சமூக வலைதளப் பிரபலங்கள் மீது நாக்பூர் சைபர் பிரிவு போலீஸார் BNS சட்டப் பிரிவுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் FIR பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கும் நோக்கில் மத்திய அரசு பெட்ரோலில் 20% எத்தனால் கலக்கும் E20 திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

எனினும், இது தொடர்பான சர்ச்சைகள் தொடரும் நிலையில், தன் மீதான அவதூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அமைச்சர் நிதின் கட்கரி நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

தலையங்கம் மதுரை மணி
திங்கட்கிழமை 27.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 11-ம் தேதி

## 'ஜீரோ புரட்சி' எச்சரிக்கை!



இந்தியாவில் பொருளாதார மாற்றங்கள் மக்களின் வாழ்க்கையை மெதுவாக பாதித்தாலும், அதற்கு பெரிய எதிர்வினை ஏற்படாத நிலையை "Boiled Frog Syndrome" (வேகவைக்கும் தவளை கோட்பாடு) என பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

முதலாவதாக, ரூபாயின் மதிப்பு சரிவு காரணமாக வாங்கும் திறன் குறைகிறது. டாலருக்கு எதிராக ரூபாய் தொடர்ந்து பலவீனமடைந்தால், இறக்குமதி பொருட்களின் விலை உயர்ந்து, வங்கியில் இருக்கும் பணத்தின் உண்மையான மதிப்பு குறையும்

இரண்டாவதாக, E20 பெட்ரோல் பயன்பாட்டால் சில வாகனங்களில் மைலேஜ் குறைவு மற்றும் உதிரிபாக சேதம் ஏற்படலாம். வாகனம் பாதிக்கப்பட்டாலும், வாகனக் கடன் (EMI) செலுத்த வேண்டிய நிலை தொடரும்

மூன்றாவதாக, வீட்டுக்கடன் EMI உயர்வு குடும்பங்களின் மாதாந்திர செலவை அதிகரித்து, கூடுதல் கடன் வாங்கும் சூழ்நிலையை உருவாக்கலாம்.

நான்காவதாக, சம்பள உயர்வு பணவீக்கத்தை விட குறைவாக இருந்தால், வருமானம் உயர்ந்தாலும் வாழ்க்கைச் செலவை சமாளிப்பது கடினமாகும். உதாரணமாக, 7% பணவீக்கத்தில் 34% மட்டுமே சம்பள உயர்வு கிடைத்தால் வாங்கும் திறன் குறையும்.

ஐந்தாவதாக, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்ப வளர்ச்சி பல அலுவலக மற்றும் சேவைத் துறை வேலைகளை தானியக்கமாக்குவதால் வேலைவாய்ப்பில் நிச்சயமற்ற நிலை உருவாகலாம்

இந்த மாற்றங்கள் அனைத்தும் திடீரென அல்லாமல் மெல்ல மெல்ல நடைபெறுவதால், மக்கள் அதனை பெரிதாக உணராமல் ஏற்றுக்கொள்கிறார்கள். இதுவே "Boiled Frog Syndrome" எனப்படும் கருத்தின் மையமாகும். அதாவது, மெதுவாக அதிகரிக்கும் பாதிப்புகளை மக்கள் உணராமல் இருப்பது எதிர்காலத்தில் தனிநபர் நிதி மற்றும் வாழ்க்கைத் தரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## விஜயின் கர்நாடகா பயணம்?

சென்னை, ஜூலை. 27–

அமைச்சர்களின் முரண்பட்ட தகவலால், பெங்களூருவில் ஆகஸ்டு 3–ந் தேதி விஜய் – டி. கே.சிவக்குமார் சந்திப்பு நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.



மேகதாது அணை பிரச்சினை கர்நாடகாவில் இருந்து காவிரி வழியாக இந்த ஆண்டு தமிழகத்திற்கு முறையாக தண்ணீர் திறக்கப்படவில்லை. தென்மேற்கு பருவமழை போதுமான அளவு பெய்யாத காரணத்தால், எங்களுக்கே விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்று கர்நாடக அரசு மறுத்துவிட்டது.

இதுவொரு பிரச்சினை என்றால், மேகதாது எனும் இடத்தில் புதிய அணை கட்ட கர்நாடக அரசு முயற்சி மேற்கொண்டு வருவது மற்றொரு பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஏற்கனவே, கர்நாடகாவில் காவிரியின் குறுக்கே 4 இடங்களில் அணை கட்டப்பட்டுள்ளது. மேகதாது விலும் அணை கட்டினால், தமிழகத்திற்கு வர வேண்டிய தண்ணீர் மேலும் குறையும்.

**எம்.ஜி.ஆர். பாணியில் விஜய்**

இதனால், மேகதாதுவில் அணை கட்டக்கூடாது என்று தமிழகம் முழுவதும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த நிலையில், மறைந்த தமிழக முன்னாள் முதல்–அமைச்சர் எம்.ஜி.ஆர். பாணியில், கர்நாடக முதல்–மந்திரியை சென்று சந்திக்க, தமிழக முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் நடவடிக்கை மேற்கொண்டார்.

அதன்படி, ஆகஸ்டு 3–ந் தேதி பெங்களூருவில் இந்த சந்திப்பு நடைபெறும் என்று தகவல்கள் வெளியானது. இதை தமிழக வேளாண் துறை அமைச்சர் வினோத் உறுதிப்படுத்தினார். ஆனால், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் மறுத்தார்.

இது தொடர்பாக, கருத்து தெரிவித்த மின்துறை அமைச்சர் நிர்மல்குமார், "முதல்–அமைச்சர் விஜய் கர்நாடகா செல்லும் முடிவை அவருடைய அலுவலகமே அறிவிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

**அமைச்சர்களின் முரண்பட்ட தகவல்**

இப்படி, அமைச்சர்களின் முரண்பட்ட தகவலால், திட்டமிட்டபடி ஆகஸ்டு 3–ந் தேதி தமிழக முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் பெங்களூரு சென்று கர்நாடக முதல்–மந்திரி டி. கே.சிவக்குமாரை சந்திப்பாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏற்கனவே, மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து கன்னட அமைப்பினர் தமிழக எல்லையில் போராட்டம் நடத்தியுள்ளனர். தமிழக எதிர்க்கட்சி தலைவரான மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரும் விஜயின் பெங்களூரு பயணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

**சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை**

எனவே, பெங்களூரு சென்று கர்நாடக முதல்–மந்திரி டி.கே.சிவக்குமாரை சந்திக்கலாமா? அல்லது ரத்து செய்யலாமா? என்று முதல்–அமைச்சர் விஜய் யோசித்து வருகிறார். காவிரி, மேகதாது பிரச்சினையை சட்ட ரீதியாக சந்திக்கலாமா? என்று சட்ட வல்லுநர்களுடன் அவர் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது.

## வேளாண் பட்ஜெட்: கருத்துகேட்பு!

சென்னை, ஜூலை. 27–

வேளாண் பட்ஜெட் தொடர்பாக கருத்து கேட்புக் கூட்டம் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வேளாண்துறை அமைச்சர் வினோத் தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், வெங்கட்ரமணன், வினோத், மரீநாத், ராஜலட்சுமி, கமலி, விஜய் பாலாஜி, ரஞ்சித் குமார், மதன் ராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். இதைபோல விவசாயிகள், முட்டை உற்பத்தியாளர்கள், கைத்தறித்து பிரதிநிதிகள், வங்கி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.



கூட்டத்தில் பேசிய அமைச்சர் வினோத், இதுவரை நான்கு மண்டல அளவிலான கூட்டம் நடத்தி உள்ளோம். சென்னையை தவிர மற்ற மாவட்ட விவசாயிகளிடம் கருத்துகள் கேட்டு முதல்–அமைச்சரிடம் வழங்கியுள்ளோம். விவசாயிகளிடம் கருத்துகள் கேட்டு வேளாண் தனி நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது. கால்நடை, மீன்வளம், கூட்டுறவு உள்ளிட்ட துறைகளுக்கு வேளாண் நிதிநிலையில் முக்கிய அறிவிப்புகள் இடம்பெறும்.

விவசாயிகள் வைக்கும் ஒவ்வொரு கோரிக்கையும் கவனமாக பரிசிலிக்கப்படும். குளிர் சாதன கிடங்குகள், நெல் சேகரிப்பு கிடங்குகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகளின் உற்பத்தி மட்டும் அதிகரித்தால் போதாது விவசாயிகளின் வாழ்வாதாரமும் உயர வேண்டும். பெண் விவசாயிகளுக்கும் இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்" இவ்வாறு அவர் பேசினார்.

## இந்த தேதிகளில் பிறந்தவர்களுக்கு அதிர்ஷ்டம்?







எண் கணிதத்தில் (Numerology), 1, 3, 6 மற்றும் 9 ஆகிய மூல எண்களைக் கொண்ட பிறந்த தேதியினர் தொழில், செல்வம் மற்றும் வாழ்க்கையில் சிறப்பான முன்னேற்றம் அடைவார்கள் என்று நம்பப்படுகிறது. எந்த மாதமாக இருந்தாலும் 1, 10, 19, 28, 3, 12, 21, 30, 6, 15, 24, 9, 18, 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் இந்த மூல எண்களுக்கு உட்பட்டவர்களாக கருதப்படுகின்றனர்.

எண் கணித நம்பிக்கையின்படி, மூல எண் 1 சூரியனின் ஆதிக்கத்தைப் பெற்றதாக கருதப்படுகிறது. இவர்கள் தலைமைத்துவம், தன்னம்பிக்கை மற்றும் நிர்வாகத் திறனில் சிறந்து விளங்கி, தொழில் மற்றும் வியாபாரத்தில் உயர்ந்த நிலையை அடையக்கூடியவர்கள் என கூறப்படுகிறது.

**மூல எண் 3** குரு கிரகத்தின் ஆதிக்கம் பெற்றதாக நம்பப்படுகிறது. இந்த எண்ணில் பிறந்தவர்கள் அறிவு, நல்லெண்ணம் மற்றும் சமூக மரியாதையால் உயர்வு பெற்று, வசதியான வாழ்க்கையை வாழும் வாய்ப்பு அதிகம் என எண் கணிதம் குறிப்பிடுகிறது.

**மூல எண் 6** சுக்கிரனின் ஆதிக்கம் கொண்டதாகக் கருதப்படுகிறது. இவர்கள் செல்வம், சொத்து, ஆடம்பரம், வாகன வசதி போன்றவற்றை எளிதில் பெறக்கூடியவர்கள் என்றும், கவர்ச்சியான ஆளுமை கொண்டவர்களாக இருப்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

**மூல எண் 9** செவ்வாய் கிரகத்தின் தாக்கத்தால் தைரியம், விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பில் முன்னிலை வகிப்பார்கள். சவால்களை வென்று செல்வம், மரியாதை மற்றும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறும் வாய்ப்பு இவர்களுக்கு இருப்பதாக எண் கணித நம்பிக்கை தெரிவிக்கிறது.

**குறிப்பு:** மேற்கண்ட தகவல்கள் எண் கணித நம்பிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டவை. இவை அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டவை அல்ல; தனிப்பட்ட வாழ்க்கை முடிவுகளுக்கு நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

## வெயில் பாதிப்பு, எடை குறைந்த குழந்தை, குறை பிரசவ அபாயம்- கர்ப்பிணிகளுக்கு எச்சரிக்கை

கடுமையான வெப்பம் கர்ப்பிணிப் பெண்களின் ஆரோக்கியத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று சமீபத்திய ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. புழுக்கமான நாட்களுக்கு ஆளாகும் பெண்களுக்கு குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறக்கும் அபாயம் அதிகமாக உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. 2,09,266 கர்ப்பிணிப் பெண்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து இந்த அறிக்கை தொகுக்கப்பட்டது. ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களின் தரவுகளும் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. கர்ப்ப காலத்தில் தாய் சூரிய ஒளியில் இருக்கும்போது, குறைந்த எடையுள்ள குழந்தை பிறப்பதற்கான ஆபத்து அதிகரிக்கிறது.

கர்ப்பத்தின் முதல் 3 மாதங்களில் கடுமையான வெப்பத்திற்கு ஆளாவது குறைப்பிரசவ அபாயத்தை அதிகரிக்கிறது என்று இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. 2–வது 3–வது மாதங்களில் கடுமையான வெப்பத்திற்கு ஆளாவது, குறைந்த எடையுள்ள குழந்தை பிறப்பதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம் மற்றும் சூரியக் கதிர்வீச்சு ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் இந்திய வெப்பக் குறியீடு, கர்ப்பிணிப் பெண்கள் எதிர்கொள்ளும் உண்மையான வெப்ப அழுத்தத்தை மிகவும் துல்லியமாக மதிப்பிட முடிந்துள்ளது. வெயில் காலங்களில் கர்ப்பிணிகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பதிவை புதுப்பிக்காத 'எம் சாண்ட்' ஆலைகள் மீது நடவடிக்கை பாயும்!

சென்னை, ஜூலை. 27–

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின், கனிமவள துறையில் முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அந்த துறைக்கான அமைச்சர் பிரபு, பல்வேறு மாவட்டங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, விதிகளை மீறி செயல்படும் குவாரிகளுக்கு, 'சீல்' வைக்க உத்தரவிட்டு வருகிறார். அத்துடன், முறைகேடுகளுக்கு காரணமான, கனிமவளத்துறை அதிகாரிகளை, ஒட்டு மொத்தமாக இடமாற்றம் செய்யவும் அரசு உத்தரவிட்டுள்ளது.



இதனிடையே கருங்கல் குவாரி முறைகேடுகளை தடுக்கும் நடவடிக்கை காரணமாக, 'எம் சாண்ட்' விலையை உற்பத்தியாளர்கள் உயர்த்தினர். இதில் தொடர்புடைய சங்கங்களை அழைத்து பேசி, அமைச்சர் எச்சரிக்கை விடுத்த நிலையில், விலை உயர்வு கைவிடப்பட்டது. அதே நேரத்தில், எம் சாண்ட் நிறுவனங்கள் தரப்பில் நடக்கும் விதிமீறல்கள் குறித்து விசாரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து, கனிம வளத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "தமிழகத்தில், ஆற்று மணலுக்கு மாற்றாக கருங்கல் துகள்களை ஆலைகளில் சுத்தப்படுத்தி, 'எம் சாண்ட்' தயாரிக்கப்படுகிறது. கட்டுமான பணிக்கு, இதை பயன்படுத்த அரசு பரிந்துரைத்துள்ளது. 'எம் சாண்ட்' தயாரிக்கும் ஆலைகள், பொதுப்பணி துறையில் பதிவு செய்ய வேண்டும். இந்த பதிவை, மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரை புதுப்பிக்கலாம்.

தமிழகத்தில், தற்போதைய நிலவரப்படி, 506 'எம் சாண்ட்' ஆலைகள் பதிவு செய்து செயல்படுகின்றன. இந்த ஆலைகளின் பதிவு விவரங்களை ஆய்வு செய்ததில், 40 சதவீதம் அதாவது, 200 ஆலைகள் பதிவை புதுப்பிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. குறிப்பாக, பெரும்பாலான ஆலைகள், கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, பதிவை புதுப்பிக்காமல் செயல்படுவது தெரியவந்துள்ளது. பதிவை புதுப்பிக்காத நிலையில், அந்த ஆலைகள் விற்பனைக்கு அனுப்பும், எம் சாண்டின் தரம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே, புதுப்பிக்காமல் செயல்படும் நிறுவனங்கள் மீது, என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

கனிமவளத்துறை செயல்பாடுகள் குறித்து, முதல்வர் விஜய் தலைமையில் சமீபத்தில் நடந்த ஆய்வு கூட்டத்தில், இது குறித்து. விவாதிக்கப்பட்டது. பதிவை புதுப்பிக்காமல், 'எம் சாண்ட்' உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் மீது, விரைவில் நடவடிக்கை பாயும்" என்று தெரிவித்தார்.

## முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான ஊழல் வழக்கு: மேல் விசாரணை நடத்த அனுமதி!

சென்னை, ஜூலை. 27–



முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான வழக்கை முடித்து வைத்த அறிக்கையை திரும்பப் பெறவும், வழக்கில் மேல் விசாரணை நடத்த அனுமதி கோரியும் லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை திங்கள்கிழமை விசாரித்த முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ். கார்த்திகேயன், வைத்திலிங்கம் மீதான வழக்கில் மேல் விசாரணை நடத்த அனுமதியளித்து உத்தரவிட்டார். விசாரணையை விரைந்து முடித்து மூன்று மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்யவும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## நம் ஒற்றுமைக்கு நோக்கம் உண்டு... ஜெய்...! அரசியல் திட்டத்தில் தனுஷ்?



சென்னை, ஜூலை. 27–

நடிகர் தனுஷ் தன் ரசிகர்களிடம் பேசிய பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

நடிகர் தனுஷ் தற்போது ஓம் திரைப்படத்தில் நடித்து வருகிறார். இதனைத் தொடர்ந்து, லப்பர் பந்து இயக்குநர் இயக்கத்திலும் இயக்குநர் வெற்றி மாறன் இயக்கும் தமிழ் முருகன் திரைப்படத்திலும் நடிக்கவுள்ளார். மேலும், பல திரைப்பட இயக்குநர்கள் தனுஷுக்குக் கதை கூறி வருகின்றனர். இந்த நிலையில், தன் பிறந்த நாளை (ஜூலை 28) முன்னிட்டு தனுஷ்நேற்று (ஜூலை 26) நலத்திட்ட உதவிகளைச் செய்தார். நிகழ்வில் தன் ரசிகர்களிடம் பேசிய நடிகர் தனுஷ், "இங்கே இவ்வளவு பேர் கூடியிருக்கிறீர்கள். நம் ஒற்றுமைக்குப் பெரிய சக்தி உண்டு. அதற்கு நோக்கமும் உண்டு. சும்மா வந்தோம், என்னைச் சந்தித்தோம், புகைப்படம் எடுத்தோம் என மட்டும் இருக்கக் கூடாது. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் சிக்கல்களில் இருந்தால் உதவுங்கள். அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளைச் செய்யுங்கள். அதற்கு எல்லாரும் கைகோர்க்க வேண்டும். நீங்கள் அதனைச் செய்வீர்கள் என நம்புகிறேன். என்னை இன்னும் வேகமாக ஓட வைக்கும் உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி... ஓம் நமச்சிவாய... ஜெ..!" எனத் தெரிவித்துள்ளார். தன் ரசிகர் மன்றத்திற்கு நோக்கமும் ஒற்றுமையும் இருப்பதாகத் தனுஷ் கூறியுள்ளது அவர் அரசியல் வருவதற்கான பேச்சு போல் தெரிகிறது என ரசிகர்கள் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

## தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் 2026-27 கல்வியாண்டு மாணவர் சேர்க்கை!

கல்வியாண்டு: 2026–2027

கல்வி நிறுவனம்: தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் (தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலைப் பல்கலைக்கழக இணைப்பு)

**மொத்த காலியிடங்கள்**

| படிப்பு | காலியிடங்கள் |
|---|---|
| ஒளிப்பதிவு (Cinematography) | 3 |
| டிஜிட்டல் இன்டர்மீடியேட் (Digital Intermediate) | 11 |
| ஒலிப்பதிவு (Audiography) | 9 |
| திரைப்படத் தொகுப்பு (Film Editing) | 4 |
| அனிமேஷன் மற்றும் காட்சி விளைவுகள் (Animation & Visual Effects) | 2 |
| மொத்த காலியிடங்கள் | 29 |

**விண்ணப்பக் கட்டணம்:** SC/ST ₹100, **மற்ற பிரிவினர்** ₹200

**ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்:** 27.07.2026

**கடைசி தேதி:** 05.08.2026 மாலை 5.00 மணி

**இணையதளம்:** www.filminstitute.tn.gov.in

**குறிப்பு:** SIFCC ஒதுக்கீட்டில் விண்ணப்பிப்பவர்கள் South Indian Film Chamber of Commerce வழங்கிய சான்றிதழையும், திரைப்படத் துறையுடன் பெற்றோர் தொடர்புடையவர் என்பதற்கான ஆதாரத்தையும் இணைக்க வேண்டும்.

## அதிகாரத்தை காட்டாதீர்கள்... மக்களின் நலனுக்காக செயல்படுங்கள் - நிர்மலா சீதாராமன்

மும்பை, ஜூலை. 27–

சாதாரண மக்களை அங்குமிங்கும் அலைய விடாமல், அவர்கள் நலனுக்காக பணியாற்றுங்கள் என்று வருமானவரித்துறை அதிகாரிகளுக்கு நிர்மலா சீதாராமன் அறிவுரை கூறினார். மும்பை நாரிமன் பாயிண்ட் பகுதியில் வருமானவரித்துறையின் புதிய கட்டிட திறப்பு விழா நடந்தது. மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், அக்கட்டிடத்தை திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:–



வருமானவரித்துறையின் இந்த 13 மாடி கட்டிடத்தை கட்டுவதற்கு உரிய அனுமதி பெறுவதற்காக வருமானவரித்துறை அதிகாரிகள் ஒவ்வொரு துறைக்கும் அலைந்துள்ளனர். மக்களை அச்சுறுத்தக்கூடிய வலிமையான படை அவர்களுக்கு உள்ளது. பின்னால் இருந்தும், அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படியானால், உங்களை அணுகும் சாதாரண மக்களின் நிலைமை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? உங்கள் அதிகாரத்தை காண்பித்து, அவர்களை அங்குமிங்கும் அலைய விடாதீர்கள். அவர்களின் நலனுக்காக பணியாற்றுங்கள். அதற்காக விதிமுறைகளை மீறுமாறு நான் சொல்லவில்லை. சாதாரண மக்களுக்காக ஏதேனும் செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

இந்த நாட்டில் மக்கள் தங்களது சட்டப்பூர்வ உரிமைகளை பெறக்கூட ஏராளமாக முயற்சி செய்ய வேண்டி இருக்கிறது.


இந்த கட்டிடம் அமைந்துள்ள இடம் 1973–ம் ஆண்டில் இருந்து வருமானவரித்துறையிடம் இருக்கிறது. இருப்பினும், சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் பெருகி வருகின்றன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் மெத்தனம் கூடாது. பெரும்பாலான வருமானவரித்துறை அதிகாரிகள் மும்பையில் வாடகை வீடுகளிலோ, அரசு குடியிருப்புகளிலோ தங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டித்தர ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மதுரை மணி
உள்ளூர் 27.07.26 வெளியூர் 28.07.26




## சார்கோமா: அரிதான புற்றுநோய்... இந்த அறிகுறிகளை அலட்சியம் செய்யாதீர்கள்!



சார்கோமா (Sarcoma) என்பது எலும்புகள், தசைகள், கொழுப்பு, குருத்தெலும்பு, இரத்த நாளங்கள் மற்றும் உடலைத் தாங்கும் மென்மையான திசுக்களில் உருவாகும் அரிதான புற்றுநோயாகும். மற்ற புற்றுநோய்களைப் போல உறுப்புகளில் அல்லாமல், உடலின் பல்வேறு பகுதிகளில் இது தோன்றக்கூடும். சில வகை சார்கோமாக்கள் வேகமாக வளர்ந்து உடலின் பிற பகுதிகளுக்கும் பரவக்கூடும். இதனால், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் சார்கோமா விழிப்புணர்வு மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த நோய்க்கான துல்லியமான காரணம் பெரும்பாலானவர்களுக்கு தெரியவில்லை. இருப்பினும், மரபணு மாற்றங்கள், முந்தைய கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் நீண்டகால வீக்கம் போன்றவை அபாயத்தை அதிகரிக்கலாம்.

சார்கோமாவின் முக்கிய அறிகுறிகளில் தொடர்ந்து பெரிதாகும் கட்டி அல்லது வீக்கம், நீடித்த எலும்பு வலி, உடல் இயக்கத்தில் சிரமம், மரத்துப் போதல் மற்றும் தசை பலவீனம் ஆகியவை அடங்கும். குறிப்பாக, 5 செ.மீ.–க்கும் அதிகமாக இருக்கும் கட்டி அல்லது பல வாரங்களாக குறையாத வீக்கம் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகுவது அவசியம். எல்லா கட்டிகளும் புற்றுநோயாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், ஆரம்ப நிலையிலேயே பரிசோதனை செய்வது பாதுகாப்பானது.

சார்கோமாவுக்கான சிகிச்சை அதன் வகை மற்றும் நிலையைப் பொறுத்து மாறுபடும். அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் இலக்கு சிகிச்சை (Targeted Therapy) ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்றால் நல்ல குணமடையும் வாய்ப்பு அதிகம் என்பதால், உடலில் தோன்றும் அசாதாரண கட்டி அல்லது நீடித்த வலியை அலட்சியம் செய்யாமல் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது மிகவும் முக்கியம்.

## ரேஷன் கடைகளில் முகத்தை ஸ்கேன் செய்ய நடவடிக்கை - அமைச்சர் வெங்கடரமணன்!



கிருஷ்ணகிரி, ஜூலை. 27–

கிருஷ்ணகிரியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கடரமணன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

"மாநிலம் முழுவதும் இதுவரை 20 ஆயிரம் புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டு உள்ளன. புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு தபாலில் அனுப்ப ஏற்பாடுகள் தயாராகி வருகிறது. ரேஷன் கார்டில் உள்ள அனைவரும் கைரேகை பதிவு செய்ய வேண்டும். அதற்கான பணிகள் 97 சதவீதம் முடிந்து உள்ளது. ரேகை பதிவாகாதவர்களுக்கு கண் விழி ஸ்கேன் செய்யப்படுகிறது. வருங்காலத்தில் ரேஷன் கடைகளில் முகத்தை ஸ்கேன் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்." இவ்வாறு அவர் கூறினார்.

## பழனியில் இந்து முன்னணி ஆர்ப்பாட்டம்!




பழனி ஜூலை 27–

பழனி மயில் ரவுண்டானா அருகில், இந்து முன்னணி சார்பில், பழனி தண்டபாணி சுவாமி நிலத்தை ரூபாய் இரண்டு கோடிக்கு மோசடியாக பத்திரப்பதிவு செய்ததை கண்டித்தும், அதற்கு சிபிஐ விசாரணை நடத்த கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசியதாவது: பழனி தண்டபாணி சுவாமி நிலம் 1988ல் எதற்காக வழங்கப்பட்டதோ அதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். இதில் மாநிலச் செயலாளர் முத்துக்குமார், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஜெகன், மதுரை கோட்டச் செயலாளர் பாலன், மாவட்டத் துணைத் தலைவர் வெங்கடேஷ், மாவட்ட செயலாளர்கள் ராஜா, கதிரவன் சிவா அஜித் உள்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

## கீழக்கரையில் பொதுமக்கள் கூட்டமைப்பு அலுவலகம் திறப்பு விழா



ராமநாதபுரம், ஜூலை. 27–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அரசு தாலுகா மருத்துவமனை முன்பாக கீழக்கரை பொதுமக்கள் கூட்டமைப்பின் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது .

விழாவில் ஜமாஅத் நிர்வாகிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

குடிநீர், மின்சாரம், சாலை, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பான பொதுமக்களின் நீண்டகால கோரிக்கைகளுக்கு அரசு துறைகள் மூலம் உரிய தீர்வு கிடைக்கச் செய்வதற்காகவும், மக்கள் நலப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காகவும் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.



மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் செனாய் நகரில் உள்ள சேவாலயம் மாணவர் விடுதியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் நினைவு நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் சுற்றுச்சூழல் உறுதிமொழி வாசித்தார். மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டது. விடுதி செயலாளர் சீனிவாசன், பொறுப்பாளர் கார்த்தி, அல்அமீன் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஷேக் நபி, ஆனையூர் அரசு பள்ளி ஆசிரியர் ஹரிபாபு, மரங்கள் மீட்பாளர் மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வேலை வாய்ப்பு

### AIIMS NORCET–11: 2,218 நர்சிங் ஆபிசர் பணியிடங்கள்!

மருத்துவத் துறையில் மத்திய அரசு வேலைக்காக காத்திருக்கும் செவிலியர்களுக்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS), Nursing Officer Recruitment Common Eligibility Test (NORCET–11) மூலம் நாடு முழுவதும் 2,218 நர்சிங் ஆபிசர் (Nursing Officer) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை (அறிவிப்பு எண்: 103/2026) வெளியிட்டுள்ளது. ஆன்லைன் விண்ணப்ப பதிவு 24.07.2026 முதல் தொடங்கி, 13.08.2026 மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

**பணியிட விவரங்கள்**

நிறுவனம்: அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS)
தேர்வு: NORCET–11 (Nursing Officer Recruitment Common Eligibility Test)
பணி: Nursing Officer
காலிப்பணியிடங்கள்: 2,218
பணி வகை: மத்திய அரசு நிரந்தர பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
முக்கிய தேதிகள்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 24.07.2026
கடைசி நாள்: 13.08.2026 (மாலை 5.00 மணி)

**விண்ணப்பிக்கும் முறை**

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் AIIMS தேர்வுகள் இணையதளம் மூலம் ஆன்லைனில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://aiimsexams.ac.in/

## ஆகஸ்டில் பிசிசிஐ முக்கிய ஆலோசனைக் கூட்டம்!



புதுடெல்லி, ஜூலை. 27–

இந்திய அணியின் வொயிட்–பால் கிரிக்கெட் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்ய, ஆகஸ்ட் தொடக்கத்தில் பிசிசிஐ முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்துகிறது.

இதில் தலைமை பயிற்சியாளர் கௌதம் கம்பீர், கேப்டன்கள் சுப்மான் கில், ஷ்ரேயாஸ் ஐயர் மற்றும் விவிஎஸ் லஷ்மண் பங்கேற்க உள்ளனர். அயர்லாந்து, இங்கிலாந்து, ஜிம்பாப்வே தொடர்களின் செயல்பாடு, 2027 உலகக் கோப்பை திட்டம், பயிற்சியாளர் குழு மற்றும் அணியின் செயல்திறன் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. கம்பீர் அல்லது கேப்டன்களின் பதவியில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், அவர் 2027 உலகக் கோப்பை வரை பயிற்சியாளராக தொடருவார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.


## சினிமா துளிகள்..!

## ‘கோவையில் ராம் சரணுக்கு அறுவை சிக்ச்சை!



‘பெத்தி’ படத்தின் சண்டைக் காட்சி படப்பிடிப்பின்போது நடிகர் ராம் சரண் கையில் காயமடைந்தார். மருத்துவர்களின் ஆலோசனையின்படி, அவர் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் மணிக்கட்டு பகுதியில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளார். அவருடன் நடிகர் சிரஞ்சீவியும் கோவை வந்துள்ளார். அறுவை சிகிச்சைக்குப் பிறகு சில நாட்கள் ஓய்வெடுத்து மீண்டும் படப்பிடிப்பில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தென்காசியில் உள்ளூர் விடுமுறை!




தென்காசி, ஜூலை. 27–

சங்கரநாராயணசாமி கோயில் ஆடித்தபசு திருவிழாவை முன்னிட்டு தென்காசி மாவட்டத்திற்கு நாளை(ஜூலை 28) உள்ளூர் விடுமுறை விடுக்கப்பட்டுள்ளது. அரசு தேர்வுகள் ஏதும் இருப்பின் சம்பந்தப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களுக்கு உள்ளூர் விடுமுறை பொருந்தாது; நாளைய விடுமுறையை ஈடு செய்யும் வகையில் ஆகஸ்ட் 1ஆம் தேதி வேலை நாளாக ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் அறிவித்துள்ளார்.

## வங்கி கிளை மேலாளரைத் தாக்கியதாக புகார்: அழகிரி மகள் கயல்விழி மீது வழக்குப் பதிவு

சென்னை, ஜூலை. 27–

சென்னை அடையாறில் செயல்பட்டு வரும் எஸ்.பி.ஐ. என்.ஆர்.ஐ. கிளை மேலாளரைத் தாக்கி மிரட்டியதாக முன்னாள் மத்திய அமைச்சர் மு.க. அழகிரியின் மகள் கயல்விழி அழகிரி மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கிளையின் கட்டிட உரிமையாளரான கயல்விழி அழகிரியிடம், பழுதடைந்த நிலையில் இருந்த லிஃப்ட்டைச் சரிசெய்யுமாறு வங்கியின் சார்பில் கேட்டுக்கொண்டபோது வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் ஆத்திரமடைந்த கயல்விழி அழகிரி நேரில் வந்து வங்கியின் கிளை மேலாளரைத் திட்டி, தாக்கி, மிரட்டல் விடுத்ததாக அந்தப் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆக. முதல் தாம்பரம் தான்! எழும்பூர் இல்லை!!

சென்னை ஜூலை 27–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் ரூ.840 கோடி மதிப்பிலான மறுசீரமைப்பு பணிகள் மூன்றாம் கட்டமாக தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக புதிய இரும்பு நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்காக, அடுத்த மாதம் (ஆகஸ்ட்) முதல் தென் மாவட்டங்களுக்கு செல்லும் சில எக்ஸ்பிரஸ்




ரெயில்கள் எழும்பூருக்கு பதிலாக தாம்பரம் ரெயில் நிலையத்தில் இருந்து இயக்கப்பட உள்ளன.

இந்த மாற்றம் புறநகர் மின்சார ரெயில் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் பணிகளை விரைவாக முடிக்க மேற்கொள்ளப்படும் தற்காலிக ஏற்பாடாகும். எந்தெந்த ரெயில்களின் புறப்பாடு மற்றும் வருகை நிலையங்கள் மாற்றப்படுகின்றன என்பது குறித்து தெற்கு ரெயில்வே விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

## அறநிலையத் துறை வெளியிட்ட புதிய கும்பாபிஷேக வழிகாட்டி!




சென்னை, ஜூலை. 27–

கோயில்களில் கும்பாபிஷேகத்தின்போது சாற்றப்படும் அஷ்டபந்தன மருந்தில் 8 மூலப்பொருட்கள் கட்டாயம் இருக்க வேண்டும். குறைந்தது 12 ஆண்டுகள் வரை சிலைகளை நிலைநிறுத்தும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்று இந்து சமய அறநிலையத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் டி.ஜி.வினய் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகத்தின்போது அஷ்டபந்தன மருந்து சாற்றப்படுகிறது. கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, வெண்ணெய் ஆகிய 8 மூலப்பொருட்கள் கொண்ட கலவையாக இந்த மருந்து இருக்க வேண்டும். குறைந்தது 12 ஆண்டுகள் வரை சிலைகளை நிலைநிறுத்தும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். சேதமடைந்த அல்லது பின்னமான சிலைகளை அகற்றிவிட்டு புதிய சிலைகளை நிறுவுவதற்கு முறையான அனுமதி பெற வேண்டும். அகற்றப்பட்ட பழைய சிலைகளை கோயில் வளாகத்திலேயே பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

புதிய சிலைகளை நிறுவும்போது, பீடத்தில் ஏற்கெனவே கண்டெடுக்கப்பட்ட தங்கம், வெள்ளி மற்றும் நவரத்தினங்கள் பற்றிய விவரங்களை உரிய பதிவேட்டில் பதிவு செய்து, பீடத்தில் மீண்டும் வைக்க வேண்டும். மண்டல இணை ஆணையர், உதவி ஆணையர், சரிபார்ப்பு அலுவலர் முன்னிலையில் அஷ்டபந்தன மருந்து சாற்றும் பணிகள் நடைபெற வேண்டும்.

இப்பணிகள் தொடங்குவது முதல் நிறைவடைவது வரை முழுமையாக புகைப்படம், வீடியோ எடுத்து ஆவணப்படுத்த வேண்டும். இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளுக்கும், ஆகம நெறிமுறைகளுக்கும் உட்பட்டு இந்த நிகழ்வு நடைபெற வேண்டும்.

உபயதாரர் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டால், அவர்களது சம்மதக் கடிதம் இணைக்கப்பட வேண்டும். பணிகள் முடிந்தவுடன், அதுகுறித்த விரிவான அறிக்கையை புகைப்படங்கள், வீடியோ ஆதாரத்துடன் ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆக.4 முதல் டிஎன்பிஎல் 2026 தொடக்கம்!




சென்னை, ஜூலை. 27–

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் (TNCA) நடத்தும் 10–வது ஸ்ரீராம் கேபிடல் டிஎன்பிஎல் 2026 போட்டி ஆகஸ்ட் 4 முதல்தொடங்குகிறது. இந்த சீசனில் 8 அணிகள் பங்கேற்கின்றன. முதல் கட்டப் போட்டிகள் திண்டுக்கல்லிலும், இறுதிக்கட்ட ஆட்டங்கள் சென்னை சேப்பாக்கம் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

டிக்கெட் கட்டணம்:

திண்டுக்கல்: அனைத்து ஸ்டாண்டுகளுக்கும் ₹200

சென்னை: லோயர் ஸ்டாண்ட் (C,D,E,F,I,J,K) ₹100, அப்பர் ஸ்டாண்ட் ₹150, KMK Terrace ₹300, KMK Lower ₹500.

## புதிய 10 கிலோ ஸ்மார்ட் எல்பிஜி சிலிண்டர் அறிமுகம்!




புதுடெல்லி, ஜூலை. 27–

காஸ் இருப்பை எளிதில் அறிய வெளிப்படையான உடல் அமைப்புடன் கூடிய ‘Indane XTRALITE NOW’ என்ற 10 கிலோ இலகுரக கலவை எல்பிஜி சிலிண்டரை இந்தியன் ஆயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சிலிண்டர் துருப்பிடிக்காத கலவை தொழில்நுட்பம், டிஜிட்டல் சேவை, அதிக பாதுகாப்பு, வசதி மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் எரிவாயு இருப்பை நேரடியாகக் கண்காணிக்க முடியும்.

மேலும், 10 மற்றும் 5 கிலோ எல்பிஜி சிலிண்டர்கள் முன்பதிவு செய்த 4 மணி நேரத்திற்குள் அல்லது வாடிக்கையாளர் விரும்பும் நேரத்தில் டெலிவரி செய்யும் சேவையையும் இந்தியன் ஆயில் தொடங்கியுள்ளது.

இந்த புதிய சேவையை இந்தியன் ஆயில் தலைவர் ஏ.எஸ். சாஹ்னே தொடங்கி வைத்து, மேம்பட்ட தொழில்நுட்பமும் விரைவான சேவையும் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு பாதுகா ப்பான, புத்திசாலித்தனமான மற்றும் வசதியான எல்பிஜி பயன்பாட்டு அனுபவத்தை வழங்கும் என்று தெரிவித்தார்.



## இன்றைய கார்ட்டூன்




## ஆக.1-ல் ராகுல் தமிழகம் வருகை!



சென்னை, ஜூலை. 27–

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை அடிமட்டத்தில் வலுப்படுத்தும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகஸ்ட் 1–ம் தேதி தமிழகம் வருகிறார். இந்தப் பயணத்தின் போது கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை சந்தித்து ஆலோசனை நடத்துவதுடன், பொதுக்கூட்டங்கள் மற்றும் முக்கிய கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.

அண்மையில் தமிழக காங்கிரஸ் தலைவராக மாணிக்கம் தாகூர் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, புதிய மாவட்டத் தலைவர்கள் நியமனம், அமைப்பு சீரமைப்பு, இளைஞர்களை கட்சியில் இணைக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சூழலில் ராகுல் காந்தியின் வருகை கட்சி அமைப்பை மேலும் வலுப்படுத்தும் என காங்கிரஸ் நம்புகிறது.

இதுகுறித்து மாணிக்கம் தாகூர் வெளியிட்டுள்ள பதிவில், அரசியலமைப்பு, ஜனநாயகம், சமூக நீதி ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கில் ராகுல் காந்தியின் பயணம் அமையும் என்றும், அவரது வருகை தமிழக காங்கிரஸ் தொண்டர்களுக்கு புதிய உற்சாகத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 2029 மக்களவைத் தேர்தலை முன்னிட்டு கட்சியை பலப்படுத்தும் முயற்சியில் இந்த வருகை முக்கியத்துவம் பெறுகிறது.



தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திமுக கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க செல்வராஜ் எம்எல்ஏ தலைமையில் சென்னை அறிவாலயத்தில் திமுக நிர்வாகிகள் சந்தித்தனர் அப்போது 36–வது வட்ட கழக செயலாளர் பி எஸ் பாண்டியன் திருச்செந்தூர் முருகன் வெண்கல திருவுருவ சிலையை அவருக்கு பரிசாக வழங்கினார்.

## அதிமுக செயற்குழு கூட்டம் ஆகஸ்டில்!

சென்னை, ஜூலை. 27–

இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழுவையும், 2 முறை செயற்குழுவையும் கூட்ட வேண்டும் என்று விதி இருக்கின்றது. அதன்படி, தமிழகத்தில் எதிர்க்கட்சிகளில் ஒன்றான அ.தி.மு.க., ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தை பிரமாண்டமாக கூட்டுவது வழக்கமாக இருந்து வருகிறது.



ஆனால், இந்த ஆண்டு சற்று முன்னதாக அடுத்த மாதமே (ஆகஸ்டு) அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தை கூட்ட கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆயத்தமாகி வருவதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே, சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க.வில் உட்கட்சி பூசல் தலைதூக்கியுள்ள நிலையில், அதை சமாளிக்க எடப்பாடி பழனிசாமி பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறார். அ.தி.மு.க.வில் அமைப்பு ரீதியாக 85 மாவட்டங்கள் இருக்கின்றன. சட்டசபை தேர்தல் தோல்வி தொடர்பாக, கடந்த ஜூன் மாதம் 13–ந் தேதி முதல் ஒவ்வொரு மாவட்ட நிர்வாகிகளையும் அழைத்து பேசி வந்தார். கூட்டத்திற்கு வராதவர்களின் பெயர்களை தனியாக குறித்து வைத்துக்கொண்டார். இந்த கூட்டம் கடந்த 25–ந் தேதியுடன் முடிவடைந்தது.

இந்த ஆலோசனை கூட்டத்தில், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், சி.வி.சண்முகம், பி.தங்கமணி உள்ளிட்டோர் பங்கேற்கவில்லை. இதேபோல், எம்.எல்.ஏ.க்கள் அருண்மொழி தேவன், சுகுமார், ராகேஷ் உள்ளிட்டோரும் கலந்துகொள்ளவில்லை. இந்த நிலையில், கூட்டத்தில் கலந்துகொள்ளாத அ.தி.மு.க. நிர்வாகிகளிடம் விளக்கம் கேட்க எடப்பாடி பழனிசாமி முடிவு செய்திருப்பதாக கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

அதிருப்தியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட உள்ளதாம். அதற்கு உடன்படாதவர்களை கட்சியைவிட்டு நீக்கவும் எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளாராம். காலியாகும் கட்சிப் பதவிகளுக்கு உடனடியாக நிர்வாகிகளையும் நியமித்து, அடுத்த மாதம் அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தையும் கூட்ட எடப்பாடி பழனிசாமி ஆயத்தமாகி வருகிறாராம்.

உள்ளாட்சி தேர்தலில் அதிக இடங்களில் அ.தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்று ஏற்கனவே நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். எனவே, முக்கிய நிர்வாகிகள் கூட உள்ளாட்சி தேர்தலில் களம் இறங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். அதனால், உள்ளாட்சி தேர்தலுக்கு தயாராகும் வகையில் அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

## விண்வெளி முதல் பாதுகாப்பு துறை வரை.. தேர்வு அமைப்பை சீர்செய்யும் உயர்மட்ட குழுவில் இடம்பெற்றவர்கள் முழு விவரம்!

புதுடெல்லி ஜூலை 27–

**உயர்மட்ட குழு**

இந்த குழுவில் வெவ்வேறு துறைகளை சேர்ந்த 6 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் விவரங்கள் கீழ் வருமாறு,

**குழு தலைவர் – நந்தன் நிலேகணி**

இன்போசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனரான இவர், இந்தியாவின் ஆதார் கார்டு திட்டத்தின் முக்கிய வடிவமைப்பாளராகக் கருதப்படுபவர்.

வினாத்தாள் தயாரிப்பு, தேர்வு மையப் பாதுகாப்பு, தேர்வர் சரிபார்ப்பு மற்றும் தேர்வு முடிவுகள் வெளியீடு என அனைத்துக் கட்டங்களிலும் அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்ப தீர்வுகளை பயன்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கி குழுவை வழிநடத்த உள்ளார்.

**டாக்டர் எஸ். சோமநாத்**

2022–2025 வரை இஸ்ரோவின் தலைவராக இருந்தவரும் விண்வெளித் துறை முன்னாள் செயலாளருமான சோமநாத், ராக்கெட் தொழில்நுட்பம் மற்றும் பெரிய அளவிலான அமைப்புகளை திட்டமிடுவதில் 40 ஆண்டுகள் அனுபவம் கொண்டவர்.

**தபன் குமார் தேகா**

2022–2026 வரை இந்திய உளவுத்துறையின் இயக்குநராக இருந்த தேகா, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் தேசியப் பாதுகாப்பில் நீண்ட அனுபவம் கொண்ட முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி ஆவார்.

இவர் தேர்வு மையங்களின் பாதுகாப்பு மற்றும் முறைகேடுகளைத் தடுக்கும் பாதுகாப்பு நெறிமுறைகளை பலப்படுத்துவதில் கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனக்காக எல்லா தியாகமும் செய்த உங்கள் ஆசையை நிறைவேற்ற முடியவில்லை.. “நீட்” அழுத்தத்தால் மாணவி



தற்கொலை

**பேராசிரியர் வி. காமகோடி**

ஐ.ஐ.டி மெட்ராஸ் இயக்குநரான இவர், கணினி கட்டமைப்பு மற்றும் சைபர் பாதுகாப்பில் நிபுணர்.

கல்வித்துறை சார்ந்த ஆலோசனைகள் மற்றும் தேர்வு முறையில் கணினி சார்ந்த பாதுகாப்பை உறுதி செய்யும் நுட்பங்களை புகுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் கடந்த ஆண்டு மாட்டுப் பொங்கல் விழாவில் பேசிய காமகோடி, மாட்டின் கோமியம் மற்றும் சாணத்தில் மருத்துவ குணம் உள்ளதாக பேசி விமர்சனத்துக்கு ஆளானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அனிதா கர்வால்**

2017–2026 வரை சிபிஎஸ்சியின் தலைவராகவும், பள்ளி இடைநிலைக் கல்வித்துறை செயலாளராகவும் பணியாற்றிய முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி அனிதா கர்வால். தேசியக் கல்விக் கொள்கை 2020உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவர்.

**அம்ரித் லால் மீனா**

2024–2025 வரை பீகார் மாநிலத்தின் தலைமைச் செயலாளராகவும், நிலக்கரித் துறை செயலாளராகவும் பணியாற்றிய அம்ரித் லால் மீனா 1989 ஆம் ஆண்டு பேட்ச் ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆவார். நிர்வாகம் மற்றும் தளவாடப் போக்குவரத்தை சீரமைப்பதில் அனுபவம் வாய்ந்தவர் இவர்.

## ஆயுத பற்றாக்குறையால் ஈரான் மீதான தாக்குதலை அமெரிக்கா நிறுத்தி வைத்ததா?

அமெரிக்கா, ஜூலை.27–

அமெரிக்க அரசு வட்டாரங்கள் தரப்பில் கூறப்பட்டதாவது: அமெரிக்க அதிபர் டிரம்ப் எப்போதும் பேச்சுவார்த்தை வழியிலான தீர்வையே விரும்புகிறார். இதை அவர் தெளிவாகக் கூறியுள்ளார். ஆனால், உண்மையான நோக்கத்துடனும், தீர்வை எட்டும் எண்ணத்துடனும் பேச்சுவார்த்தைக்கு வரத் தவறினால், என்ன நடக்கும் என்பதை ஈரானுக்கு அவர் காண்பித்துள்ளார். தற்போதைக்கு ஈரான் மீதான தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தும் திட்டத்தில் இருந்து பின்வாங்க டிரம்ப் முடிவு செய்துள்ளார்.



மோதலை விரிவுபடுத்துதல், ஆயுத கையிருப்பு குறைவு, எரிசக்தி விநியோகம் பாதித்தல் உள்ளிட்டவை குறித்து டிரம்ப் அடைந்துள்ளார். அமெரிக்காவின் ஆயுத கையிருப்பு குறித்து அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், முப்படை தலைமைத் தளபதி டான் கெயின் ஆகியோர் டிரம்ப்பிடம் கவலை தெரிவித்தனர்.

இந்நிலையில், ஈரான் மீதான தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது” என்று கூறியுள்ளன. ஆயுதங்கள் பற்றாக்குறை காரணமாகவே டிரம்ப் தாக்குதல் நிறுத்தம் செய்து இருக்கலாம் என்று சர்வதேச ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

## விருதுநகர் பட்டாசு குடோனில் வெடி விபத்து: உயரும் பலி!



சிவகாசி, ஜூலை. 27–

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே செங்கமலப்பட்டி மற்றும் நாராயணபுரம் பகுதியில் நடந்த வெடி விபத்தில் ஏற்கனவே 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் 90 சதவீத தீக்காயங்களுடன் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ராமச்சந்திரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால் இந்த சம்பவத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

## வருங்கால வைப்பு நிதி வட்டி: ரூ.1.44 லட்சம் கோடி செலுத்தியது மத்திய அரசு!

சென்னை, ஜூலை. 27–

ஊழியர்களின் ஓய்வூதிய சேமிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (இ.பி.எப்.) கணக்கில் இருக்கும் இருப்பு தொகைக்கு ஆண்டுதோறும் வட்டி கணக்கிட்டு மத்திய அரசு வழங்கி வருகிறது.




அந்தவகையில் 2025–26–ம் நிதியாண்டுக்கு 8.25 சதவீதம் வட்டி நிர்ணயிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் வட்டி கணக்கிடப்பட்டு சந்தாதாரர்களின் வங்கி கணக்கில் வரவு வைப்பது வழக்கம். அந்த வகையில், 2025–26–ம் நிதியாண்டில் 34 கோடி சந்தாரர்களுக்கு ரூ.1.44 லட்சம் கோடியை வட்டியாக வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

அதன்படி, தற்போது ஒவ்வொரு சந்தாதாரர்களின் வங்கி கணக்கிலும் வட்டி வரவு வைக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலான சந்தாதாரர்களின் பி.எப். கணக்கில் வட்டி வரவு வைக்கப்பட்டு உள்ளதாகவும், ஒருவேளை இதுவரை வட்டி வரவு வைக்கப்படவில்லையெனில் பதற்றம் அடைய தேவையில்லை என்றும், அடுத்த சில நாட்களில் வட்டி வரவு வைக்கப்படும் என்றும் வருங்கால வைப்பு நிதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் பால், தயிர் விலை உயர்வு...!

சென்னை, ஜூலை. 27–

தமிழகத்தில் நடப்பாண்டில் 2–வது முறையாக தனியார் பால் நிறுவனங்கள் பால், தயிர் விலையை உயர்த்தியுள்ளன. அமிர்தா, திருமலா, ஜெர்சி, ஹெரிடேஜ், வேதா, சக்ரா நிறுவனங்களின் பால், தயிர் விலை லிட்டருக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், ஆரோக்யாவை தொடர்ந்து, அமிர்தா, வேதா, சன், ராஜ், சக்ரா, திருமலா, ஜெர்சி, ஹெரிடேஜ், டோட்லா உள்ளிட்ட நிறுவனங்கள் நிகழாண்டில் 2–வது முறையாக பால், தயிர் ஆகியவற்றின் விலையை லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தியுள்ளன.

பால் உற்பத்தி குறைவு, கொள்முதல் விலை மற்றும் மூலப்பொருள்களின் விலை உயர்வு காரணமாக விலை உயர்த்தப்பட்டாலும், பால் முகவர்களின் ‘கமிஷன்’ மற்றும் ஊக்கத் தொகையை உயர்த்த தனியார் நிறுவனங்கள் முன்வரவில்லை.

எரிபொருள், கடை வாடகை, ஊழியர் ஊதியம் உள்ளிட்ட செலவுகளைக் கருத்தில் கொண்டு, பால் முகவர்களுக்கு சதவீத அடிப்படையில் கமிஷன் மற்றும் ஊக்கத் தொகை வழங்க வேண்டும். இந்த ஆண்டில், மொத்தமாக லிட்டருக்கு ரூ.6 வரை விலை உயர்ந்துள்ளதால், குறைந்த விலை கொண்ட ஆவின் பாலை மக்கள் அதிகம் வாங்கும் நிலை உருவாகியுள்ளது. அதனால், ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள்ளதால், தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இந்திய ரூ. 200, ரூ. 500 தாள்களுக்கு 10 ஆண்டுகளுக்குப் பின் நேபாள அரசு அனுமதி!



புதுடெல்லி, ஜூலை. 27–

இந்திய ரூபாய் நோட்டுகளுக்கு விதித்த கட்டுப்பாடுகளை நேபாளம் தற்போது தளர்த்தியுள்ளது. அதாவது, இந்தியாவில் 2016–ஆம் ஆண்டு நவம்பர் 9–ஆம் தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்ட ரூ.200, ரூ.500 நோட்டுகளுக்கு நேபாளம் அனுமதியளித்துள்ளது.

இதுகுறித்து நேபாள ராஷ்டிர வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில், ரூ.25,000 மதிப்புக்கு ரூ.200, ரூ.500 இந்திய ரூபாய் நோட்டுகளை கொண்டு வரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இந்திய ரூபாய் நோட்டுகளை இந்தியா தவிர பிற நாடுகளில் இருந்து நேபாளத்துக்கு கொண்டு வரக் கூடாதென்றும், அதேபோல் நேபாளத்திலிருந்தும் இந்திய ரூபாய் நோட்டுகளை இந்தியா தவிர பிற நாடுகளுக்கு எடுத்துச் செல்லக் கூடாதென்றும் நேபாள ராஷ்டிர வங்கி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு மருத்துவக்கல்லூரிகளில் நடக்க இருந்த ஆர்ப்பாட்டம் ரத்து!

சென்னை, ஜூலை. 27–

சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

தமிழ்நாட்டில் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் , மாணவர்கள் நல வாரியம் (welfare board),பாதுகாப்பு குழு (security commit–tee),மாணவர் மன்றங்களை (students council) அமைத்திட வேண்டும் .ICC உட்புகார் குழுக்களை (விஷாகா கமிட்டிகளை ) அமைத்திட வேண்டும். பயிற்சி மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படி மாணவர்களுக்கு தொடர்ந்து எட்டு மணி நேரத்திற்கு மேல் பணி வழங்கக் கூடாது. பயிற்சி மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் பயிற்சி கால உதவி ஊதியத்தை உயர்த்திட வேண்டும். சேலம் அரசு மருத்துவக்கல்லூரிக்கு கூடுதலாக ஒரு கல்லூரி பேருந்தை தமிழ்நாடு அரசு உடனடியாக வழங்கிட வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (28.07.2026) மாலை தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் நடைபெற இருந்த கண்டன ஆர்ப்பாட்டம் ரத்து செய்யப்படுகிறது. அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி முடிவு செய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020